2007 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 114, மாண்புமிகு திரு. ல. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

114—

ஆற்றுப் பாசனம்

***570—திரு. ல. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதியிலுள்ள மானாவாரி நிலங்களுக்கு தாமிரபரணி கால்வாய் மூலம் ஆற்றுப் பாசனத்திற்கு வழிவகை செயய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்று நீரைக் கோவில்பட்டி தொகுதியில் உள்ள மானாவாரி நிலங்களுக்குக் கொண்டு செல்ல நில மட்டம் ஏதுவாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ல. ராதாகிருஷ்ணன்.

திரு. ல. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொகுதி மானாவாரி நிலங்கள் நிறைந்த பகுதி. அதுமட்டுமல்லாமல், நாலாட்டின்புத்தூர், முடுக்கு மீண்டான்பட்டி, ஊத்துப்பட்டி, கரிசல்பட்டி, கரிசல்குளம, கசவன்குன்று, தோணுகால், பரந்தகுளி, ஐயனேரி, குருவிகுளம், குறிஞ்சாக்குளம், விள்ளாகுளம் போன்ற பகுதிகளில் மழைநீரின் மூலமாகக் கண்மாய்கள் உருவாக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் நெல் விவசாயம் செய்து வருகின்றார்கள். மழையை எதிர்பார்த்து இந்தப் பகுதிகள் இருக்கின்ற காரணத்தினால் மழை பெய்யாமல் பொய்த்து விடுகின்ற காலங்களில் நெற் பயிர்கள் வீணாகி பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அறுவடை செய்து, அதை வைக்கோலுக்கு மட்டும் பயன்படுத்துகிறார்கள். இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம

[2007 ஏப்ரல் 23

அடைகின்றார்கள். அதுமட்டுமல்ல, இந்தக் கண்மாயை அனுசரித்துதான் அங்கே TWAD மூலமாக எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள். குடிநீர்த் தட்டுப்பாடும் கோடைக்காலங்களில் 3 மாத காலங்களுக்கு கோவில்பட்டி தொகுதியில் நிலவி வருகின்றது. ஆகையால், தனிக் கவனம் செலுத்தி கோவில்பட்டி பகுதிக்குத் தாமிரபரணி ஆற்றின் மூலமாக நீர் ஆதாரத்தைக் கண்டுபிடித்து, இடங்களைத் தேர்வு செய்து அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கின்ற நேரத்தில் கோவில்பட்டி மட்டுமல்ல, விளாத்திக்குளம், ஒட்டப்பிடாரம் ஆகிய தொகுதிகளும் சிறப்பு அடையும் என்று கூறி அதற்கு ஆவன செய்யப்படுமா என்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியினுடைய நில அமைப்பு அப்படி. அதனுடைய வடக்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் வைப்பாற்றுப் படுகையிலும் அதனுடைய தெற்குப் பகுதி உப்பாற்றுப் பகுதியிலும் அமைந்திருக்கிறது. ஆனால், தாமிரபரணியினுடைய படுகையிலிருந்து தண்ணீரைக் கொண்டுவருவதானால் நிலமட்டம் சுமார் 100 மீட்டர் உயரத்திற்கு மேலே அமைந்திருக்கிறது. எனவே, நில மட்டம் இதற்கு இடம் தராத காரணத்தினால்தான் தண்ணீரைக் கொண்டு வருவதிலே சிரமம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ல. ராதாகிருஷ்ணன்.

முற்பகல் 10–00

திரு. ல. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றாறு பகுதியில் இருந்து அந்தத் தாமிரபரணி ஆற்றுக்குச் செல்கின்ற, மேட்டுப் பகுதியிலிருந்து சங்கரன்கோயில், கழுகுமலை வழியாகப் புதிதாக அந்தப் பகுதியினுடைய உயரத்தைக் கணக்கிட்டு, அதற்குத் தண்ணீர் வழங்க தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: வறண்ட பகுதிக்குத் தண்ணீரைத் தரவேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்தில்லை. அவர்

2007 ஏப்ரல் 23]

கேட்டது தாமிரபரணியில் இருந்து வருமா என்று. இப்போது அவர் கேட்பது சிற்றாறு பகுதியில் இருந்து கேட்கிறார். ஆகையினால் அதுகுறித்து அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த எனது காவேரிப்பட்டினம் தொகுதி மக்களில் சுமார் 70 சதவிகிதம் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். மறைந்த காமராஜர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கே.ஆர்.பி. அணையின்மூலம் எனது தொகுதியின் பாதி மக்கள் பயனடைந்து வருகின்றார்கள். மீதியுள்ள பாதி மக்கள் தண்ணீர் இல்லாமல் வேற்றுப் பயிர் செய்து வருகின்றனர். எனவே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பெண்ணேஸ்வரமடம், வாடமங்கலம், குடிபையனஹள்ளி, செலகுடபட்டி, பாரூர் ஆகிய பகுதிகளில் சிறிய தடுப்பணைகள் கட்டினால் ஆற்று நீரைத் தேக்கி அப்பகுதி மக்கள் பயனடைவார்கள். அதேபோல, உபரி நீர் சரியாக விவசாயத்திற்குப் பயன்படும். எனவே, மேற்படி ஆற்று நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் வழிவகை செய்ய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலித்து, அது சரி என்று பட்டால், சாத்தியக்கூறு இருக்குமானால் அதுபற்றி அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

115—

கட்டட வசதி

***8024—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு, விடையளிப்பாரா—